பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**07 12 2025** **SUNDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி ஒரு லட்சத்து **51** ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

**2)** கோவை மாவட்டம் வால்பாறையில் மனித — வனவிலங்கு மோதலை தடுப்பதற்காக குழு ஒன்றை தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது.

**3)** தமிழகத்தில் இதுவரை **99** புள்ளி எட்டு ஒன்பது சதவீத வாக்காளர் கணக்கீட்டுப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

**4)** சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் **100** நாட்களுக்கு மேல் நடத்தப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

**5)** **Taipei** ஓபன் வில்வித்தை போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி ஒரு லட்சத்து 51 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

லே-யில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை இன்று தொடங்கிவைத்து அவர் பேசினார்.

பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதியும் கிட்டத்தட்ட 24 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் அமைச்சர் கூறினார்.

கடந்த 2014-ஆம் ஆண்டு பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி 46 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கும், ஏற்றுமதி ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கும் இருந்ததாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>

கோவை மாவட்டம் வால்பாறையில் மனித — வனவிலங்கு மோதலை தடுப்பதற்காக குழு ஒன்றை தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், முதன்மை தலைமை வன காப்பாளர் திரு ராமசுப்பிரமணியன் தலைமையிலான இந்தக்குழுவில், ஆனைமலை புலிகள் காப்பகத்தின்

துணை இயக்குனர் உட்பட ஐந்து பேர் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வால்பாறை, தேயிலை எஸ்டேட் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை திறம்பட மேற்கொள்வதற்கான பரிந்துரைகளை இரண்டு வாரங்களுக்குள் இக்குழு சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வால்பாறையில் ஐந்து வயது சிறுவன் சிறுத்தையால் தாக்கப்பட்டு உயிரிழந்ததையடுத்து தமிழக அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் கீழ், இதுவரை 99 புள்ளி எட்டு ஒன்பது சதவீத கணக்கீட்டுப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதன்படி, 6 கோடியே, 40 லட்சத்து 45 ஆயிரத்து 131 கணக்கீட்டுப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில், 99 சதவீத படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, புதுக்கோட்டை மாவட்டத்தில் தேர்தல் ஆணையம் நிர்ணயித்த காலத்திற்குள் இப்பணிகள் நிறைவடையும் என்று மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலரான திரு ராஜராஜன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(*Sound Byte — ராஜராஜன் - 53 Sec.)*

<<<<<>>>>>

லாரி உரிமையாளர்கள் வரும் 9-ஆம் தேதி அறிவித்துள்ள வேலை நிறுத்த போராட்டத்தை ஒத்திவைக்க வேண்டும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று நாமக்கல் மாவட்டம் பரமத்தியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், லாரி உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கை முறையாக பராமரிக்க உறுதியான நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ளவில்லை என்று அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக் அக்கட்சி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், கும்பகோணம் பட்டீஸ்வரத்தில் மாணவர்கள் இடையேயான மோதலில் 12-ஆம் வகுப்பு மாணவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த உயிரிழப்பு வேதனைக்குரியது என்று கூறியுள்ள அஇஅதிமுக, இதற்கு திமுக அரசே பொறுப்பேற்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் குறைந்தது 100 நாட்களுக்கு மேல் நடத்தப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், மக்களின் குறைகளை தீர்க்கும் வகையில் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 40 நாட்கள் கூட சட்டப்பேரவையை திமுக அரசு கூட்டவில்லை என்று குறை கூறியுள்ளார்.

இதேபோல், சட்டப்பேரவை நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்பு செய்வதாக அளித்த வாக்குறுதியையும் திமுக அரசு நிறைவேற்றவில்லை என்றும் திரு நயினார் நாகேந்தின் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

மகாகவி பாரதியாரின் ஜதிப்பல்லக்கு ஆசை **100** ஆண்டுகளுக்கு பின்னர் எட்டயபுரத்தில் கோலாகலமாக நிறைவேறியது.

இதனையொட்டி, எட்டயபுரம் நகரமே விழாக்கோலம் பூண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — லஷ்மணன் — 50 Sec.)***

<<<<<>>>>>

மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி சேலத்தில் நடைபெற்றது.

பெண்கள் தொடர்ந்து இரண்டு மணிநேரம் **Zumba** நடனமாடி விழிப்புணர்வு ஏற்படுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — விஜயகுமார் - 42 Sec. )***

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோவில் கும்பாபிஷேகம் நாளை நடைபெறுவதையொட்டி அதற்கான ஏற்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில் நடைபெற்றது.

---------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பசுமை சாம்பியன் விருதுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் அடுத்த மாதம் 20-ஆம் தேதிக்குள் பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் கேட்டுக்கொண்டுள்ளார்.

-----------------

பெரம்பலூர் மாவட்டத்தில் கொடிநாள் நிதி நன்கொடையை பெறுவதில் சிறப்பாக பணியாற்றிய அலுவலர்களுக்கான பாராட்டு சான்றிதழ்களை ஆட்சியர் திருமதி மிருணாளினி இன்று வழங்கினார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Taipei** ஓபன் வில்வித்தை போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

**21** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில் திருமுரு கணேஷும், மகளிர் பிரிவில் **Chikitha Taniparthi**-யும் தங்கப்பதக்கம் வென்றனர்.

அபிஷேக் வர்மா மற்றும் ஜோதி சுரேகா வெண்கலப்பதக்கம் வென்றனர்.

-------------------

உலகக்கோப்பை இறுதி துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியாவின் **Aishwary Pratap Singh Tomar** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

தோஹாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் **50** மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

ஆடவர் பத்து மீட்டர் பிரிவில் **Samrat Rana**-வுக்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

இப்போட்டியில இந்தியா இதுவரை ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்று பதக்கப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

-------------------

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Sanskar Saraswat** பட்டம் வென்றார்.

**<<<<<END>>>>>**